





श्रीमत् वेदान्त रामानुज मुनि करुणालब्ध वेदान्त युग्मम्
श्रीमत् श्रीवास योगीश्वर गुरुपदयोर्पित स्वात्मभारम्
श्रीमत् श्रीरङ्गनाताह्वय मुनिकृपया प्राप्त मोक्षाश्रमं तं
श्रीमत् वेदान्त रामनुज मुनिमपरम् संश्रये देशिकेन्द्रम्



श्रीमत् श्रीवास योगीश्वर मुनि करुणालब्ध वेदान्त युग्मम्
श्रीमत् वेदान्त रामानुज गुरुपदयोर्पित स्वात्मभारम्
श्रीमत् श्रुत्यन्त रामानुज यति नृपतेः प्राप्त मोक्षाश्रमं तं
श्रीमत् श्रीवास रामनुजमुनिं संश्रये ज्ञानवार्धिम्



वेदान्त लक्ष्मण मुनीन्द्र कृपात्त बोधम्
तत्पाद युग्म सरसीरुह भृङ्गराजम्
त्रय्यन्त युग्म कृतभूरि परिश्रमं तं
श्रीरङ्ग लक्ष्मणमुनिम् शरणं प्रपद्ये

# நவமணிமாலை

*navamaNimAlai*

# நவமணிமாலை

தனியன்

**ஸ்ரீ ப்ரம்ஹ தந்த்ர ஸ்வதந்த்ர ச்வாமிகல் அருளிச்செய்த**

रामानुज दयापात्रं ज्ञान वैराग्य भूषणम् ।
श्रीमद् वेङ्कटनाथार्यं वन्दे वेदान्त देशिकम् ॥

**ஸ்ரீ பிள்ளை லோகாசார்யர் அருளிச்செய்த**

சீரொன்று தூப்புல் திருவேங்கடம் உடையான்
பாரொன்றச் சொன்ன பழமொழியுள்
ஓரொன்று தானே அமையாதோ தாரணியில் வாழ்வார்க்கு
வானேறப் போமளவும் வாழ்வு

**ஸ்ரீ நிகமாந்த மஹாதேசிகன் அருளிச்செய்த**

*ஒருமதி அன்பர் உளம் கவர்ந்தன*
*உலகம் அடங்க வளர்ந்து அளந்தன*
*ஒருசடை ஒன்றிய கங்கை தந்தன*
*உரக படங்கள் அரங்கு கொண்டன*
*தருமம் உயர்ந்தது இதென்ன நின்றன*
*தருமன் இரந்தது இசைந்து சென்றன*
*சகடம் உடைந்து கலங்க வென்றன*
*தமர்கள் அருந்து மருந்து இது என்பன*

*திருமகள் செய்ய கரங்கள் ஒன்றின*
*திகழ் துளவுந்து மணம் கமழ்ந்தன*
*செழுமணி கொண்ட சிலம்பு இலங்கின*
*சிலைதனில் அன்றோர் அணங்கு உமிழ்ந்தன*
*அருமறை அந்தம் அமர்ந்த பண்பின*
*அயன் முடி தன்னில் அமர்ந்து உயர்ந்தன*
*அருள்தர வெண்ணி அயிந்தை வந்தன*
*அடியவர் மெய்யர் மலர்ப் பதங்களே* [1]

# நவமணிமாலை

மகரம் வளரும் அளவில் பௌவம் அடைய உற்று அலைத்தனை
வடிவு கமடமென அமர்ந்து கிரிதனைத் தரித்தனை
மலியும் அசுரன் உரம் இடந்து வசுதையைப் பெயர்த்தனை
வலிகொள் அவுணன் உடல் பிளந்து மதலைமெய்க்கு உதித்தனை
பகரும் உலகம் அடி அளந்து தமர்களுக்கு அளித்தனை
பரசு முனிவன் வடிவு கொண்டு பகைவரைத் துணித்தனை
பணிய விசைவில் தசமுகன் தன் முடிகள் பத்து உதிர்த்தனை
படியும் உருவில் வரு பிலம்ப அசுரனைத் தகர்த்தனை

நகரி துவரை என உகந்து வரை கரத்தெடுத்தனை
நடமொடு இயலு பரியில் வந்து நலிவறுக்க உற்றனை
நலியும் வினைகள் செகுமருந்தின் நலமுறைந்த வெற்பினை
நணுகு கருட நதி கிளர்ந்த புனல் உகப்பில் வைத்தனை
அகர முதல உரைகொள் மங்கை கணவனுக்கு அளித்தனை
அடையும் வினதை சிறுவனுய்ய அருள் கொடுத்து உயர்த்தினை
அடியும் அணையும் எனும் அனந்தன் அடிதொழக் களித்தனை
அவனி மருவு திருவயிந்தை அடியவர்க்கு மெய்யனே [2]

புரம் உயர்த்த அசுரர்கட்கு ஓர்
புறம் உரைத்த பொய்யினான்
வரை எடுத்து மழை தடுத்த
மழையொடு ஒத்த மெய்யினான்
திரை நிரைத்த கடல் எரித்த
சிலை வளைத்த கையினான்
அருள் கொடுத்து வினை தவிர்க்கும்
அடியவர்க்கு மெய்யனே [3]

தேசு ஒத்தார் இல்லை எனும்
தெய்வ நாயகனார்
வாசக் குழல் மாமலராள்
மணவாளர்
வாசித்து எழும் மன்மதனார்
மணல் தோப்பில்
மாசிக் கடலாடி
மகிழ்ந்து வருவாரே [4]

# நவமணிமாலை

உருளும் சகடம் ஒன்று உதைத்தாய்
உலகம் ஏழும் உண்டுமிழ்ந்து அளந்தாய்
பொருளும் அழலும் இறையாகப் பூண்டேன்
அடிமை இனில் மீண்டேன்
இருளும் அருளும் தரும் அந்நாள்
எழிலார் ஆழி சங்கேந்தி
அருளும் தெருளும் தர என்பால்
அடியோர் மெய்ய வந்தருளே [5]

வஞ்சனை செய் பூதனையை மலியும் சாட்டை
மல்லரையோர் மத களிற்றை வானோர் அஞ்சும்
கஞ்சனை முன் கடிந்து அவனி பாரம் தீர்த்த
காவலனே கோவலனாய் நின்ற கோவே
அஞ்சனமும் காயாவும் அனைய மேனி
அடியவர்க்கு மெய்யனே அயிந்தை வாழும்
மஞ்செனவே அருள் பொழியும் வள்ளலே
நின் வடிவழகு மறவாதார் பிறவாதாரே [6]

மையுமா கடலும் மயிலும் மாமழையும்
மணிகளும் குவளையும் கொண்ட மெய்யனே
அடியோர் மெய்யனே விண்ணோர் ஈசனே
நீசனேன் அடைந்தேன்
கையும் ஆழியுமாய் களிறு காத்தவனே
காலனார் தமர் எனை கவராது
ஐயனே வந்து அன்று அஞ்சல் என்றருள்
தென் அயிந்தை மானகர் அமர்ந்தானே [7]

*மஞ்சுலாவு சோலை சூழ் அயிந்தை மன்னு மன்னுசீர்*
*வரை எடுத்து நிரை அளித்த மாசில் வாசுதேவனே*
*செஞ்சொல் அன்பர் சிந்தை கொண்டு தீதிலாத தூதனாய்த்*
*தேரு மூர்ந்து தேசுயர்ந்த செல்வ தெய்வ நாயக*
*வெஞ்சொலாளர் கால தூதர் வீசு பாசம் வந்தென்மேல்*
*விழுந்தழுந்தி யான் அயர்ந்து வீழ்வதற்கு முன்ன நீ*
*அஞ்சல் அஞ்சல் அஞ்சல் என்று அளிக்க வேண்டும் அச்சுதா*
*அடியவர்க்கும் அருளியக்கும் அடியவர்க்கு மெய்யனே* [8]

## நவமணிமாலை

*பொருத்தம் பொருந்தலும்*
*போகும் தவற்றுடன் பொய்ம் மதிமேல்*
*விருத்தம் கலித்துறை*
*மேவும் அழல் மதம் வேறு இனியென்*
*திருத்த மனத்தினில்*
*சேரா எமை தெய்வநாயக*
*நின் வருத்தம் பொறா அருளால்*
*மன் அடைக்கலம் கொண்டருளே* [9]

*அந்தமில்சீர் அயிந்தை நகர் அமர்ந்த நாதன்*
*அடியிணைமேல் அடி உரையால் ஐம்பதேத்தி*
*சிந்தை கவர் பிராகிருதம் நூற கூறிச்*
*செழுந்தமிழ் மும்மணிக்கோவை செறியச் சேர்த்து*
*பந்து கழல் அம்மானை ஊசல் ஏசல்*
*பரவு நவமணி மாலை இவையும் சொன்னேன்*
*முந்தை மறை மொழிய வழி மொழி நீயென்று*
*முகுந்தன் அருள் தந்த பயன் பெற்றேன் நானே* [10]